தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
22.4.2026 (புதன்கிழமை)



ஜிப்மரில்

# குழந்தைகளுக்கான நீரிழிவு நோய் விழிப்புணர்வு கருத்தரங்கு

புதுச்சேரி, ஏப்.22-

ஜிப்மர் குழந்தைகள் நல மருத்துவ துறை சார்பில் குழந்தைகளிடம் அதிகரித்து வரும் டைப்-1 நீரிழிவு நோய் தொடர்பாக அவசர கவனம் தேவை என்பதை வலியுறுத்தி பொது சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கம் ஜிப்மர் கருத்தரங்கு கூடத்தில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு குழந்தைகள் நல மருத்துவ துறை பேராசிரியர் டாக்டர் தில்லி குமார் தலைமை தாங்கி பேசுகையில், வயது வந்தவர்களில் பொதுவாக காணப்படும் டைப்-2 நீரிழிவிலிருந்து மாறுபட்டு, டைப் 1 நீரிழிவு என்பது உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு இன்சுலின் உற்பத்தியை முழுமையாக பாதிக்கும் ஒரு நோயாகும். இது பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரை பாதிக்கிறது. காரணமறியாத உடல் எடை குறைவு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக தாகம், சோர்வு போன்ற ஆரம்ப அறிகுறிகளை கவனிக்காமல் விட்டால், உயிருக்கு ஆபத்தான அவசர நிலைக்கு விரைவாக மாறக்கூடும் என்றார்.

கருத்தரங்கில் குழந்தைகள் மற்றும் பெற்றோர் பலர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு நீரிழிவு நோய் குறித்து பல்வேறு ஆலோசனைகள் கூறப்பட்டன. சரியான பராமரிப்புடன் இந்த நோயுடன் வாழும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் நிறைவான வாழ்க்கையையும் நடத்த முடியும் என்று வலியுறுத்தப்பட்டது. பெற்றோர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு டாக்டர்கள் விளக்கம் அளித்தனர்.

தினமலர்
புதுச்சேரி | புதன் | 22.4.2026

# குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, ஏப். 22–

புதுச்சேரி ஜிப்மரில் குழந்தைகளுக்கு அதிகரித்து வரும் டைப் 1 நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

ஜிப்மர் குழந்தை மருத்துவத் துறை சார்பில், நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு, குழந்தை நல மருத்துவ துறை பேராசிரியர் தில்லி குமார் தலைமை தாங்கினார்.

செவிலியர் அதிகாரி பரிமளா, டைப் 1 நீரிழிவு கொண்ட குழந்தைக்கு இன்சுலின் செலுத்துதல், ரத்த சர்க்கரை அளவை கண்காணித்தல், குறைந்த, அதிக சர்க்கரை அறிகுறிகளை அடையாளம் காணுதல் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் நடைமுறை சவால்களை சமாளிக்கும் வழிகளை விளக்கினார்.

டாக்டர் மிலன் முகம் மது, உணவு தொடர்பான வழிகாட்டுதலையும், உளவியல் நிபுணர் அகில் மன நல சவால்கள் குறித்தும், மன அழுத்த மேலாண்மை மற்றும் நேர்மறையான வாழ்க்கை அணுகுமுறை குறித்தும் பேசினார்.

முனைவர் நான்ஸி பிரேம்குமார், டைப் 1 நீரிழிவு பாதிப்பு கொண்ட பள்ளி மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், தேர்வின் போது சர்க்கரை பரிசோதனை கருவி மற்றும் சிற்றுண்டி எடுத்துச் செல்ல அனுமதி போன்ற அரசின் அனுமதிகள் குறித்து விளக்கினார்.

நிகழ்ச்சியில், மொபைல் சாதனத்தின் மூலம் ரத்த சர்க்கரை அளவை தொடர்ந்து கண்காணிக்க உதவும் வகையிலான, டைப் 1 நீரிழிவு பராமரிப்பில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றமான கண்டினியூஸ் குளுக்கோஸ் மானிட்டரிங் தொழில்நுட்பமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்ப கட்டத்தில் டைப் 1 நீரிழிவு நோயை அடையாளம் கண்டு சரியான சிகிச்சை அளித்தால், குழந்தைகளின் வாழ்க்கை தரம் மற்றும் எதிர்காலம் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியை, டாக்டர் மிதிலேஷ் ஒருங்கிணைத்தார்.

தினகரன்
ஏப்ரல் 22, 2026 புதன்கிழமை

# ஜிப்மரில் டைப்-1 நீரிழிவு நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, ஏப். 22: டைப்-1 நீரிழிவு என்பது உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு இன்சுலின் உற்பத்தியை முழுமையாக பாதிக்கும் ஒரு தன்னைத்தாக்கும் நோயாகும். இது பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரைக் பாதிக்கிறது, காரணமறியாத உடல் எடை குறைவு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக தாகம், சோர்வு போன்ற ஆரம்ப அறிகுறிகளை கவனிக்காமல் விட்டால், டையாபடிக் ஆசிட் எனப்படும் உயிருக்கு ஆபத்தான அவசர நிலைக்கு மாறக்கூடும். குழந்தைகளில் அதிகரித்து வரும் டைப் -1 நீரிழிவு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. ஜிப்மர் குழந்தை நல மருத்துவ துறை மருத்துவர் தில்லிகுமார் தலைமை தாங்கினார். இதில் குழந்தைகள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டு, தினசரி நீரிழிவு மேலாண்மைக்கு தேவையான அறிவு மற்றும் திறன்களைப் பெற்றனர். இந்த நோயுடன் வாழும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், நிறைவான வாழ்க்கையையும் நடத்த முடியும் என்பதை மருத்துவர் மிகிலேஷ் தெரிவித்தார்.

ஜிப்மர் செவிலியர் அதிகாரி பரிமளா நீரிழிவு கொண்ட குழந்தைகளுக்கு இன்சுலின் செலுத்துதல், ரத்த சர்க்கரை அளவை கண்காணித்தல், அதிக சர்க்கரை அறிகுறிகளை அடையாளம் காணுதல் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் உணர்ச்சி மற்றும் நடைமுறை சவால்களை சமாளிக்கும் வழிகளை விளக்கினார். மருத்துவர் மிலன் முகம்மது, முனைவர் தான்ஸி பிரேம்குமார் ஆகியோர் டைப் 1 நீரிழிவு பராமரிப்பில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றமான தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மொபைல் சாதனத்தின் மூலம் ரத்த சர்க்கரை அளவை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது. இதனால் அடிக்கடி விரல் குத்தும் சோதனைகள் குறைந்து, குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பராமரிப்பு கிடைக்கிறது. என்பதை வலியுறுத்தினார்.

Government of India
Press Information Bureau
International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

# JIPMER Organizes Awareness Programme on Early Recognition and Management of Type 1 Diabetes in Children

Posted On: 21 APR 2026 6:35PM by PIB Chennai




In a significant public health initiative, the Department of Paediatrics at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER) highlighted the critical need for early recognition and lifelong management of Type 1 Diabetes Mellitus (T1DM) among children. Led by Dr. Dilli Kumar, Professor of Paediatrics, the outreach focused on distinguishing T1DM as an autoimmune condition leading to complete insulin deficiency, unlike the more common Type 2 diabetes. Experts warned that early signs such as unexplained weight loss, frequent urination, and excessive thirst must be identified promptly to prevent life-threatening emergencies like diabetic ketoacidosis. To empower families, the department is organizing a dedicated education programme for children with Type 1 diabetes and their caregivers, coordinated by Dr. Mithilesh, featuring a multidisciplinary team to address the clinical, nutritional, and emotional challenges of the condition.

The programme offered holistic support, featuring practical insulin administration insights from Nursing Officer Ms. Parimala—who shared her perspective as both a professional and a mother—alongside nutritional guidance on carbohydrate counting from Dietitian Dr. Milan Muhamood. Psychological well-being was addressed by Ms. Ahil, while Social Service Officer Dr. Nancy Premkumar detailed government provisions for school-going children and financial assistance from NGOs. A key highlight was the introduction of Continuous Glucose Monitoring (CGM) technology, which Dr. Dilli Kumar noted is transforming pediatric care by making it more precise and child-friendly. The initiative concluded by emphasizing that increased awareness among parents, teachers, and the community is the cornerstone of early diagnosis and ensuring that children with T1DM lead healthy, fulfilling lives.

Link: [https://www.pib.gov.in/PressReleaseDetail.aspx?PRID=2254226&reg=6&lang=1](https://www.pib.gov.in/PressReleaseDetail.aspx?PRID=2254226&reg=6&lang=1)

Government of India

Press Information Bureau

International Year of Cooperatives 2025

Cooperatives Build a Better World

# குழந்தைகளிடம் அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் டைப் 1 நீரிழிவு – ஜிப்மர் எச்சரிக்கை

प्रविष्टि तिथि: 21 APR 2026 6:35PM by PIB Chennai





குழந்தைகளிடம் அதிக அளவில் டைப் 1 நீரிழிவு பாதிப்பை ஏற்படுத்துவதாக ஜிப்மர் எச்சரித்துள்ளது. இதையடுத்து பொதுச் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வை ஜிப்மர் குழந்தைநல மருத்துவ துறை நடத்தியது. இந்த நிகழ்வு டைப் 1 நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்துவரும் ஜிப்மர் குழந்தைநல மருத்துவத் துறை பேராசிரியர் மருத்துவர் தில்லி குமார் தலைமையில் நடைபெற்றது.

வயது வந்தவர்களில் பொதுவாக காணப்படும் டைப் 2 நீரிழிவிலிருந்து மாறுபட்டு, டைப் 1 நீரிழிவு என்பது உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு இன்சுலின் உற்பத்தியை முழுமையாக பாதிக்கும் ஒரு தன்னைத்தாக்கும் நோயாகும். இது பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரைக் பாதிக்கிறது. காரணமறியாத உடல் எடை குறைவு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக தாகம், சோர்வு போன்ற ஆரம்ப அறிகுறிகளை கவனிக்காவிடில், ‘டையாபடிக் கேட்டோஅசிடோசிஸ்’ எனப்படும் உயிருக்கு ஆபத்தான அவசர நிலைக்கு விரைவாக மாறக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

விழிப்புணர்வு குறையை நீக்கவும், குடும்பங்களை வலுப்படுத்தவும், ஜிப்மர் குழந்தை மருத்துவத் துறை டைப் 1 நீரிழிவு கொண்ட குழந்தைகள், அவர்களின் பராமரிப்பாளர்களுக்கான சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் குழந்தைகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டு, தினசரி மேலாண்மைக்கு தேவையான வழிகாட்டுதல்களைப் பெற்றனர். மேலும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் நடைமுறை சவால்களையும் எடுத்துரைத்து, சரியான பராமரிப்புடன் இந்த நோயுடன் வாழும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் நிறைவான வாழ்க்கையையும் நடத்த முடியும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியை மருத்துவர் மிதிலேஷ் ஒருங்கிணைத்து, நிபுணர்களுடன் இணைந்து செயல்பட்டார்.

Link: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2254253&reg=3&lang=2

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# JIPMER holds programme on early detection, management of Type 1 diabetes in children

UPDATED : ஏப் 21, 2026 10:23 PM
ADDED : ஏப் 21, 2026 10:24 PM

**Chennai:** The Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER) has organised an awareness programme highlighting the importance of early recognition and lifelong management of Type 1 diabetes among children, officials said.

The initiative, led by the Department of Paediatrics, focused on distinguishing Type 1 diabetes as an autoimmune condition causing insulin deficiency, unlike the more common Type 2 diabetes. Experts said early symptoms such as unexplained weight loss, frequent urination and excessive thirst should be identified promptly to prevent complications like diabetic ketoacidosis.

As part of the outreach, the institute announced a dedicated education programme for children with Type 1 diabetes and their caregivers, involving a multidisciplinary team to address clinical, nutritional and emotional aspects of the condition.

Sessions covered insulin administration, dietary management through carbohydrate counting, psychological well-being and available government and NGO support for affected children.

The programme also highlighted the use of Continuous Glucose Monitoring (CGM) technology, which experts said is improving diabetes care by enabling better monitoring.

Officials emphasised that greater awareness among parents, teachers and the community is key to early diagnosis and effective management of the condition.

Link: https://www.dinamalar.com/news/kalvimalar-news-en/jipmer-holds-programme-on-early-detection-management-of-type-1-diabetes-in-children/59576

தினமலர் 75
தேசிய தமிழ் நாளிதழ்

# குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி

ADDED : ஏப் 22, 2026 05:56 AM

புதுச்சேரி: புதுச்சேரி ஜிப்மரில் குழந்தைகளுக்கு அதிகரித்து வரும் டைப் 1 நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

ஜிப்மர் குழந்தை மருத்துவத் துறை சார்பில், நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு, குழந்தை நல மருத்துவ துறை பேராசிரியர் தில்லி குமார் தலைமை தாங்கினார்.

செவிலியர் அதிகாரி பரிமளா, டைப் 1 நீரிழிவு கொண்ட குழந்தைக்கு இன்சுலின் செலுத்துதல், ரத்த சர்க்கரை அளவை கண்காணித்தல், குறைந்த, அதிக சர்க்கரை அறிகுறிகளை அடையாளம் காணுதல் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் நடைமுறை சவால்களை சமாளிக்கும் வழிகளை விளக்கினார்.

டாக்டர் மிலன் முகம்மது, உணவு தொடர்பான வழிகாட்டுதலையும், உளவியல் நிபுணர் அகில் மனநல சவால்கள் குறித்தும், மன அழுத்த மேலாண்மை மற்றும் நேர்மறையான வாழ்க்கை அணுகுமுறை குறித்தும் பேசினார்.

முனைவர் நான்ஸி பிரேம்குமார், டைப் 1 நீரிழிவு பாதிப்பு கொண்ட பள்ளி மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், தேர்வின் போது சர்க்கரை பரிசோதனை கருவி மற்றும் சிற்றுண்டி எடுத்துச் செல்ல அனுமதி போன்ற அரசின் அனுமதிகள் குறித்து விளக்கினார்.

நிகழ்ச்சியில், மொபைல் சாதனத்தின் மூலம் ரத்த சர்க்கரை அளவை தொடர்ந்து கண்காணிக்க உதவும் வகையிலான, டைப் 1 நீரிழிவு பராமரிப்பில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றமான கண்டினியூஸ் குளுக்கோஸ் மானிட்டரிங் தொழில்நுட்பமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்ப கட்டத்தில் டைப் 1 நீரிழிவு நோயை அடையாளம் கண்டு சரியான சிகிச்சை அளித்தால், குழந்தைகளின் வாழ்க்கை தரம் மற்றும் எதிர்காலம் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியை, டாக்டர் மிதிலேஷ் ஒருங்கிணைத்தார்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/diabetes-awareness-program-for-children/4205913